**R.E.A.No.121/2017 in R.E.P.NO.80/2008**
**நாள்:05.02.2020**

எ.ம.சா.1 - சம்பத்

எ.ம.சா,1 முறையாக மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதித்ததின் பேரில் எ.ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு கூடுதல் முதல் விசாரணை

அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் கோப்பில் அ.வ.எண்.542/1988 என்ற வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அழைப்பாணை படி மெமோவின் சா.நகல் ஆஜர் செய்கிறேன். அது எ.மா.சா.ஆ.1 ஆகும். மேற்சொன்ன எ.மா.சா.ஆ.1-ல் பிரதிவாதிகளாக காட்டப்பட்டுள்ள பட்டியலில் பத்தாவது பிரதிவாதியாக கந்தசாமி மனைவி சுந்தரம் என்று அந்த படி மெமோவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன படி மெமோவின் படி பிரதிவாதிகளில் சிலருக்கு சார்வு செய்யப்பட்டு திருப்பப்பட்ட அசல் அழைப்பாணையின் சா.நகல் ஆஜர்படுத்தப்படுகிறது. அது எ.ம.சா.ஆ.2 ஆகும். அந்த எ.ம.சா.ஆ.2 அழைப்பாணை 10-ம் பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்டுள்ளதற்கு சான்றாக 10-ம் பிரதிவாதி சுந்தரம் என்பதற்கு பதிலாக சௌந்திரம் என்று கையொப்பமிட்டு அழைப்பாணை பெற்றுள்ளார். மேற்சொன்ன வழக்கில் தீர்ப்பு பெறப்பட்ட பின்பு தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனு எண்72/2006-ல் எதிர்மனுதாரருக்கு சார்வு செய்யப்பட வேண்டிய அழைப்பாணைனக்காக தாக்கல் செய்யப்பட்ட படி மெமோவின் படி நகலை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.3 ஆகும். எ.ம.சா.ஆ.3 படி மெமோவில் மேற்சொன்ன சுந்தரம் 7-ம் எதிர்மனுதாரராக காட்டப்பட்டு படி மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன எ.ம.சா.ஆ.3 படி மெமோவின் அடிப்படையில் எதிர்மனுதாரர்களில் சிலருக்கு சார்வு செய்யப்பட்டு திருப்பப்பட்ட அசல் அறிவிப்பின் சான்றிட்ட நகல் ஆஜர் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.4 ஆகும். எ.ம.சா.ஆ.4 அறிவிப்பின் பின்புறம் 7-ம் எதிர்மனுதாரர் சுந்தரம் என்பவர் தனது பெயரை சௌந்திரம் என்று கையொப்பம் செய்து அறிவிப்பை பெற்றுள்ளார். மேற்சொன்ன அசல் வழக்கிலும் நிறைவேற்று மனுவிலும் அறிவிப்பும் அழைப்பாணையும் பெற்ற சுந்தரம் என்பவர்

நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபணை எதுவும் தற்போது வரை தெரிவிக்கவில்லை.

குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.